10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 02 | அதிர்வு 11 | வெள்ளிக்கிழமை 11 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## ஒற்றுமையுடன் நினைவு கூருங்கள்

### பசீர் காக்கா அழைப்பு

யாழ்ப்பாணம்,மே 11

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்த முன்வரவேண்டும் என தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் நீண்டகாலம்

06▶

## அரசுக்கு எதிரானவர்களை சிறைக்குள் தள்ள முயற்சி



### பதறுகிறார் மகிந்த

கொழும்பு,மே 11

“விசேட நீதிமன்றங்களை அமைக்கும் சட்டத் திருத்தமானது, அரசாங்கத்துக்கு எதிரானவர்களை வேட்டையாடும் நோக்கிலானதே” என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசியல் கலாசாரத்தை தூய்மைப்படுத்தும் நோக்கில் இந்த சட்டம் உருவாக்கப்படவில்லை.

இந்த புதிய சட்டத்தின் ஊடாக பிரதம

06▶

## மக்களின் காணிகளை விடுவிக்க இராணுவத்துக்கு கப்பம்

கொழும்பு,மே11

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற தனியார் காணிகளில் 522 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தனியார் இடங்களை விடுவிக்கும் போது அவற்றில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் வேறு இடத்தில் மீள அமைக்கப்பட உள்ளது.

அவற்றை ஸ்தாபிப்பதற்கு செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள 866.71 மில்லியன் ரூபாவை இராணுவத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை

06▶

## கோத்தா கைதாகாமை காரணத்தை அறியாத ராஜித

கொழும்பு,மே 11

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை கைது செய்யமுடியாமைக்கான காரணம் தனக்கும் தெரியவில்லை என சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றைய தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது பிணை முறி விவகாரத்துடன் தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை கைது செய்ய ஏன்

06▶

## எரிபொருள் விலை மாறும்

கொழும்பு,மே.11

புதிய விலைச் சூத்திரத்துக்கமைவாக எரிபொருள் விலை இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றமடையலாம் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்த விலை மாற்றமானது உலக சந்தை விலைக்கமைய அதிகரிக்கும் அல்லது குறையும் என்று அவர் கூறியுள்ளார். (த)

## மே18 தமிழ் தேசிய துக்கநாள்

### வடக்கு மாகாண சபை பிரகடனம்




யாழ்ப்பாணம்,மே 11

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது தமிழ் மக்கள் பெருமளவில் கொன்று குவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான மே-18ஆம் திகதியை தமிழ் இன அழிப்பு நாளாகவும், தமிழ்த் தேசியத்தின் துக்க நாளாகவும் வடக்கு மாகாண சபை நேற்று பிரகடனப்படுத்தியது.

வடக்கு மாகாண சபையின் 122ஆவது அமர்வு நேற்று

06▶

## சத்தியலிங்கம் நிரபராதியாம்

யாழ்ப்பாணம்,மே 11

வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குற்றமற்றவர். அவர் மீது சபையில் எந்த குற்றச்சாட்டுக்களும் இல்லை என அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 122வது அமர்வு நேற்று பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது 120 ஆவது அமர்வில் முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் கூறிய கருத்துக்கு

06▶

## இந்த வருடமும் இனப்படுகொலை வாரம்

யாழ்ப்பாணம்,மே 11

தமிழர் தாயகப்பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனப்படுகொலை வாரம் இந்த ஆண்டும் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இனப்படுகொலை வாரம் தொடர்பான அறிவிப்பை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் எதிர்வரும் 12 ஆம் திகதி இனப்படுகொலை வாரம் ஆரம்பித்து வைக்கப்படும் எனஅவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்த நினைவு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (த)

## பஸ், ஓட்டோ கட்டணமும் உயரும்

கொழும்பு,மே 11

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளர்.

இதன்படி இந்த விடயம் தொடர்பாக இன்றையதினம் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனுவிஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை முச்சக்கர வண்டி கட்டணங்களை அதிகரிப்பதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்தினரும் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பான அறிவித்தலொன்றை விரைவில் அந்த சங்கத்தினர் விடுக்கவுள்ளனர். (த)

## காலமானார் கணேஷ்



யாழ்ப்பாணம்,மே 11

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் கந்தையா கணேஷ் நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

வடமராட்சி பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், அரச அதிபராக 19 ஆண்டுகளாக கடமையாற்றிய பெருமையைப் பெற்றவர்.

அவரது இறுதிக் கிரியைகள் கிழவி தோட்டம், கரவெட்டியில் அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் நடைபெறும் என உறவினர்கள் அறிவித்துள்ளனர். (த)

## தந்தையின் வான் மோதி ஐந்து வயது மகள் பலி



வவுனியா,மே 11

வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் தந்தையின் ஹயஸ் ரக வானுடன் மோதுண்டு ஐந்து வயதேயான ஒரேயொரு மகள் பலியாகியுள்ளார்.

இந்த சம்பவத்தில் சுகந்தன் துசாந்தினி என்ற சிறுமியே உயிரிழந்தது.

காலையில் வீட்டிலிருந்து ஆடைத் தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றிச் செல்லும் தனது

06▶

## முன்னாள் அமைச்சர்கள் மீது மேலும் ஒரு விசாரணை

யாழ்ப்பாணம்,மே 11

பதவி நீக்கம் செய்யப்பட்ட வடமாகாண முன்னாள் அமைச்சர்கள் 4 பேர் மீதும் உள்ள குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாக விசாரித்து, தண்டனை வழங்குவதற்காக மேலும் ஒரு விசாரணையை நடத்துவதற்காக பிரதம செயலாளரிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

வடமாகாண சபையின் 122வது அமர்வு நேற்று பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாண முன்னாள் அமைச்சர்கள் 4 பேர் மீது முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு விசாரணை நடத்தியது. அந்த விசாரணை குழுவின் அறிக்கை வெளியாகிய பின்னரும், அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக

06▶





# சிறைக்குள் சித்திரவதை: சட்டத்தரணிகள் போராட்டம்

வவுனியா, மே 11

வவுனியா சிறைச்சாலையில் கைதிகளுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் இழைக்கப்படும், சித்திரவதை, அராஜகம் போன்றவற்றைக் கண்டித்து அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள், நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நேற்று கவன வீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் சட்டத்தரணிகள் பலரும் கலந்து கொண்டனர்.

“வவுனியா சிறைச்சாலையில் இடம் பெறும் ஊழல், சித்திரவதை, அராஜகம் போன்றவற்றை எதிர்த்து தாமாகக் குரல் கொடுக்க முடியாத விளக்கமறியல் கைதிகளின் சார்பில், அவர்களின் நிலைமையை வெளி உலகுக்கு தெரியப்படுத்தும் நோக்கில், நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விளக்கமறியல் சிறைக்கூடம் வட மாகாணத்தை விட்டு வெளியே சென்று வர முடியாத மக்களுக்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் வவுனியாவில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இப்போது, அது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதையாகி விட்டது. எதற்கெடுத்தாலும் பணம். நின்றால் பணம், இருந்தால் பணம், படுத்தால் பணம் என்ற நிலையில் அங்கு அடைக்கப்பட்டுள்ள கைதிகள் உள்ளனர். ஒரு கைதி நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டுமாக இருந்தால் நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுக்க வேண்டி உள்ளது. தொலைபேசி அழைப்பு ஒன்றை எடுக்க ஒரு நிமிடத்துக்கு 100 ரூபா அறவிடப்படுகிறது.

வவுனியா நீதிமன்றம் கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருட்கள் தொடர்பில் மிகவும் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. ஆனால், இந்த சிறைச்சாலையில் எதை நீதிமன்றம் தடுக்க விரும்புகின்றதோ அது தாராளமாக கிடைக்கின்றது. இந்த நிலை மாறவேண்டும். ஏழைகள் துன்புறுத்தப்படுவதும் ஏழைகளின் பணம் வஞ்சிக்கப்படுவதும் நிறுத்தப்படவேண்டும். நாம் முன்பும் பல முயற்சிகளை எடுத்திருந்தோம். ஆனால், பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லை.

சட்டத்தரணிகள் சங்கத்தால் 3 கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். உடனடியாக இங்கு கடமையாற்றும் அத்தனை உத்தியோகத்தர்களும் மாற்றப்பட்டுப் புதிதாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சுதந்திரமானதும் பாரபட்சமற்றதுமான குழுவை அமைத்து சிறைச்சால்லையில் உள்ள கைதிகளின் சாட்சியத்தைப் பதிந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்,

இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாத பட்சத்தில், இந்த விளக்கமறியல் சிறைச்சாலை மூடப்பட வேண்டும். ” என்று சிரேஸ்ட சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தெரிவித்தார். (ஆ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது


வவுனியா, மே 11

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் மாலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பஸ்ஸில் கேரளக் கஞ்சா கடத்துவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து 2 கிலோ 72 கிராம் கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (ஆ)



## தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு , மே 11

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து, 2.1 கிலோ கிராம் தங்கத்துடன் ஒருவரைப் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் இலங்கையர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த நகைகள் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# 430 வீடுகள் கையளிப்பு



கொழும்பு, மே 11

கொழும்பு நகரத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 430 வீடுகளை கையளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

பெருநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகரப் புனர்வாழ்வு பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் ‘வீட்டுக்குப் பதிலாக வாழ்க்கை’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016, 2017ஆம் ஆண்டுகளில் 7 ஆயிரத்து 496 மில்லியன் ரூபா முதலீட்டில் ஆயிரத்து 874 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கும் நோக்கில் 42 ஆயிரத்து 330 மில்லியன் ரூபா முதலீட்டில் 9 ஆயிரத்து 100 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஹேணமுல்ல, தெமட்டகொட, அங்கொட, மட்டக்குளிய, மாளிகாவத்தை, கொலன்னாவ, புளுமென்டல் ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரகுமான், மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த சிறி வர்ணசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொரளை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி அஜித் பத்திரண, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுமேத ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ஆ)

## பேஸ்புக் பிரதிநிதிகள் இலங்கை விஜயம்!

கண்டி, மே 11

அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு, பேஸ்புக் நிறுவனத்தின் 3 பிரதிநிதிகள் இலங்கைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துக்கு, பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக தகவல் பரப்பப்பட்டமையே காரணம் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த குற்றச் சாட்டுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காகவே இந்த விசேட குழு இலங்கை வந்துள்ளது.

சிங்கப்பூர் மற்றும் இந்தியாவில் உள்ள பேஸ்புக் நிறுவனத்தின் அலுவலகப் பிரதிநிதிகள் மூவரே இவ்வாறு வருகை தந்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் குற்ற விசாரணை திணைக்களம், குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரைச் சந்தித்துள்ளனர்.

மேலும், பேஸ்புக் நிறுவனப் பிரதிநிதிகளால் நாட்டில் தொழில் முனைவோர்களுக்காக விசேட கருத்தரங்கு ஒன்றும் நடத்தபட உள்ளது. (ஆ)

## கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

கொழும்பு , மே 11

வெலிகம, மிரிஸ்ஸ, தெஹிவளை, கல்கிசை மற்றும் நீர்கொழும்பு ஆகிய கடற்கரை பிரதேசங்களில் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இந்த மாதத்துக்குள் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக, அதன் பணிப்பாளர் பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார். (ஆ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 11 மே 2018 ethirolimedia@gmail.com

# ஏற்றும் வரை ஏற்றுங்கள்

இருக்கும் பிரச்சினைகள் போதாதென்று, இப்பொது எரிபொருள் விலையையும் நல்லாட்சி அரசு தாறுமாறாக ஏற்றியிருக்கிறது. அதிலும் மண்ணெண்ணெயின் விலையை இருமடங்கிலும் அதிகமாக்கி, தன் விலையேற்ற வேகத்தைக் காட்டியிருக்கிறது. இதுவரை அரைச்சதம் அடிக்கவே தள்ளாடிய – 44 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட – மண்எண்ணெய் இனி சதமடிக்க – 101 ரூபாவாக – விற்பனையாக உள்ளது. இந்தச் சதமடிப்பு உடனடியாக ஏழை விவசாயிகளின் வயிற்றில்தான் அடிக்கப் போகின்றது. சமுர்த்திப் பயனாளிகளும், மீனவர்களும் 44 ரூபாவுக்கே மண்ணெண்ணெயைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்ட போதிலும், அதில் விவசாயிகள் உள்ளடக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகளின் நீர்ப்பாசனத்துக்கான மண்ணெண்ணெயே பிரதானமாகப் பயன்படுகின்றது. இந்த நிலையில், விவசாயிகளின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதால் விவசாய விளைபொருட்களும் அடுத்து வரும் மாதங்களில் உச்சத்தைத் தொடப்போகின்றது. பெற்றோல் 20 ரூபாவாலும், டீசல் 9 மற்றும் 14 ரூபாவாலும் அதிகரித்திருப்பதால், உடனடியாகவே போக்குவரத்துக் கட்டணங்களை தனியார் பஸ் உரிமையாளர்களும், ஓட்டோக்காரர்களும் உயர்த்தப் போவதாக அறிவித்துள்ளனர். இப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் தினமும் மக்களின் முதுகில் சுமைகளைச் சுமத்துவதிலேயே நல்லாட்சி அரசு கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஏற்கனவே 'தூங்குமூஞ்சி' அரசு என்ற பெயர் நல்லாட்சி அரசுக்கு வந்ததாலேயே, உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மிகப்பெரிய அடியை வாங்கவேண்டியிருந்தது. எதற்குமே லாயக்கில்லாத இந்த அரசு, மக்களின் பணத்தைச் சுரண்டுவதிலும், நாட்டின் கஜானாவைக் கபளீகரம் செய்து தங்கள் சொத்துக்களைப் பெருக்கிக் கொள்வதிலும் மட்டுமே அதிக கவனம் செலுத்துகின்றது. நாட்டைப் பற்றியோ, சரிந்து பாதாளத்தில் வீழ்ந்து போய்க்கொண்டிருக்கும் பொருளாதாரத்தைப் பற்றியோ, மக்களின் வாழ்வைப் பற்றியோ இந்த அரசுக்குத் துளியும் அக்கறை கிடையாது. எப்படியாவது 4 வருடங்களும் ஆட்சியில் இருந்துவிட்டால் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். எனவேதான் மக்கள் நலனைப் பற்றிய கவலை இல்லாமல், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை ஒவ்வொன்றாக ஏற்றிவருகின்றது நல்லாட்சி அரசு.

ஏற்கனவே கெட்டுப்போன தன் பெயரை மீண்டும் மீண்டும் கெட்டுப்போகச் செய்வதற்காகவே – ஒரு அரசியல் தற்கொலையாகவே– இந்த விலையேற்றங்கள் அமைந்தன. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப் போனமைக்கு, அவரின் காலப்பகுதியில் பொருட்களின் விலைகள் உச்சவிலைக்கு விற்கப்பட்டமையும் ஒரு காரணம். புதிய அரசாங்கம் வந்தால், பொருட்களின் விலை சடுதியாகக் குறையும் என்று மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதுபோல எரிபொருட்களின் விலையையும், அத்தியாவசியப் பொருட்களினதும் விலையையும் அரசு குறைத்தது. தங்கள் துன்பங்கள் எல்லாம் நீங்கி, வாழ்க்கைச் சுமை தூசாகிவிடப்போகின்றது என்ற கனவில் அவர்கள் மிதந்தார்கள். ஆனால், எல்லாம் கொஞ்ச நாட்கள் தான்.

மகிந்தவுக்கும், மைத்திரிக்கும் குறைந்த பட்சம் ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிக்க முடியாதளவுக்கு, மக்கள் நலன் மீது நல்லாட்சி அரசும் கதகளி ஆடத் தொடங்கியது. நாட்டின் மத்திய வங்கி முதல் அனைத்து நிதி வளங்களும் அமைச்சர்களினால் விழுங்கப்பட்டன. எந்தவொரு உருப்படியான செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கமால், வாழ்வாதாரச் சுமையை அதிகரிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நல்லாட்சி அரசு பயணப்பட்டு வருகின்றது. இந்தப் போக்கால், மைத்திரியை விட மகிந்த எவ்வளவோ பரவாயில்லை என்ற மனநிலைக்குப் பெரும்பாலான மக்கள் வந்துவிட்டார்கள். எந்தவொரு அரசும், தங்கள் ஆட்சியை அடுத்த தடவையும் நீட்டிப்பதற்காக, மக்களுக்கு 'ஐஸ்' வைக்கும் காரியங்களைச் செய்யும். ஆனால் நல்லாட்சி அரசு மட்டும் அடுத்த முறை எப்பாடுபட்டேனும் ஆட்சியைத் தாங்கள் பிடிக்கவே கூடாது என்ற ரீதியில் செயற்பட்டுவருகின்றது.

இன்னும் என்னென்ன பொருட்கள் விலையேறப் போகின்றனவோ என்று ஏக்கத்தோடு இருக்கும் மக்களின் இப்போதைய ஒரே எதிர்ப்பார்ப்பு, அடுத்த தேர்தல் மட்டுமே. விலைகளை ஏற்றும் வரை ஏற்றட்டும், தேர்தலில் பார்த்துக் கொள்கிறோம் எனக் கறுவியபடி மக்கள் காத்திருக்கிறார்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச காப்புறுதி திட்டம்

கொழும்பு, மே 11

இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் கல்வி அமைச்சினால் இலவசமாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

சுகாதார மற்றும் திடீர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் இவ்வாறான நன்மைகளை தற்போது பெற்றுக்கொள்ளலாம் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

0113 641555 என்ற இலக்கத்தில் கல்வி அமைச்சையோ அல்லது 0112 357357 என்ற இலக்கத்தில் ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் நிறுவனத்தையோ தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விசேட காப்புறுதித் திட்டத்தை இந்த நாட்டின் மிகப்பெரிய தேசிய காப்புறுதி நிறுவனமான ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் செயற்படுத்துகின்றது.

சுரக்ஷா என அழைக்கப்படும் இந்தக் காப்புறுதி திட்டத்தில் மாணவ, மாணவிகளின் பெற்றோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு விசேட பதிவுகள் அவசியமில்லை எனவும் பாடசாலையில் கொடுக்கப்படும் படிவத்தை நிரப்புவதன் மூலம் காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு ஒரு வருடத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா வரை வைத்தியசாலை சிகிச்சைக்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் நாள் ஒன்றுக்கு 1000 ரூபா வீதம் 30 நாட்களுக்கு கொடுப்பனவு இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் விபத்துக்களுக்கு மாணவ, மாணவிகளுக்கு ஒரு இலட்ச ரூபாயும், பெற்றோர் திடீர் விபத்தில் உயிரிழந்தால் 75 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டத்தினால் 4.5 மில்லியன் மாணவ, மாணவிகள் நன்மையடைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரசாங்க, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கல்விகற்கும் அனைத்து மாணவர்கள் மற்றும் பிரிவெனாவில் கல்விகற்கும் பிக்கு மாணவர்களும் இந்தத் திட்டத்தில் காப்புறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரி நீக்கம்

கொழும்பு, மே 11

18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் வங்கிகளில் உள்ள சேமிப்புக் கணக்குகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறினார்.

# நியமனம் இரத்து

கொழும்பு, மே 11

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த அநுருத்த பொல்கம்பலவின் நியமனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ரத்துச் செய்துள்ளார்.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த பீ. திசாநாயக்க இந்திய வர்த்தகர் ஒருவருக்கு சுந்தளாய் சீனிக்கூட்டுத்தாபனத்தை குத்தகைக்கு வழங்கும் விடயம் தொடர்பாக இலஞ்சம் பெற முயன்ற சம்பவத்தில் கைது செய்யப்பட்டு தற்போதைக்கு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அநுருத்த பொல்கம்பலவை நியமித்திருந்தார்.

ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இவர் ஜப்பானுக்கு நபர் ஒருவரை சட்டவிரோதமாக அழைத்துச் சென்ற குற்றச்சாட்டில் அக்கட்சியின் அங்கத்துவத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் கடந்த 2015ம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த அநுருத்த பொல்கம்பல சுதந்திரக்கட்சியிலும் இணைந்து கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே அவருக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அவருக்கு எதிரான முன்னைய ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் தற்போது மீண்டும் கிளறப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதைக் காரணமாகக் கொண்டு அநுருத்தவுக்கு வழங்கப்பட்ட நியமனத்தை ஜனாதிபதி ரத்துச்செய்துள்ளார்.

அநுருத்த பொல்கம்பலவின் நியமனத்துக்கு எதிராக அமைச்சர் ராஜித சேனாரத்னவும் பகிரங்கமாக கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பிரதேசசபை முதல் அமர்வில் எவர் படத்தை வைப்பது என தர்க்கம்

மன்னார், மே 11

மன்னார் பிரதேச சபை மற்றும் அங்குள்ள தவிசாளர் அலுவலகம் போன்றவை ஒரு கட்சி அலுவலகம் போன்று செயற்படுவதாகவும் படங்கள் வைப்பதிலும் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் பிரதேச சபை தலைவர் எஸ்.எச்.முஜாஹிர் தலைமையில் மன்னார் பிரதேச சபையில் இடம்பெற்றது.

இதன் போது முதல் அமர்வுக்கு மன்னார் பிரதேச சபையின் 21 உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

தொடர்ந்து பல்வேறு பட்ட விடயங்கள்தொடர்பில்கலந்துரையாடப்பட்ட போது மன்னார் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பாலசிங்கம் கதிர்காமநாதன் எழுந்து பிரச்சினையை முன்வைத்தார்.

"அனைவரும் ஒற்றுமையினையும், சமாதானத்தையும் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் மன்னார் பிரதேச சபை மற்றும் அங்குள்ள தவிசாளர் அலுவலகம் போன்றவை ஒரு கட்சி அலுவலகம் போன்று செயற்படுவதாக குற்றம் சுமத்தினார்.

குறிப்பாக மன்னார் பிரதேச சபையில் அரசியல் பிரமுகர்கள் அனைவருடைய புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு கட்சியை பிரதி நிதித்தவப்படுத்தும் அலுவலகமாகவே நான் அதனை பார்க்கிறேன். இங்கு அரசியல் பிரமுகர்களின் புகைப்படங்களை கொழுவுவதாக இருந்தால் அனைவருடைய புகைப்படங்களையும் கொழுவ வேண்டும். இல்லை என்றால் உரிய பிரமுகர்களின் புகைப் படங்களை மட்டுமே கொழுவ வேண்டும்" என தெரிவித்தார்.

மேலும் அதே கருத்தை மன்னார் பிரதேச சபை உறுப்பினர் கொன்சால் குலாஸ் உட்பட சிலர் முன் வைத்து, சபையில் விவாதம் இடம் பெற்றது.

இதன் போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அமைச்சர் றிஸாட் பதியுதீனின் புகைப்படம் இருந்தால் என்ன? அவர் தான ஒரே ஒரு கபினட் அமைச்சர். அவர் மூலமாக மன்னார் பிரதேச சபைக்கு அதிக நிதியை வழங்க ஒரு வாய்ப்பாக அமையும் என தெரிவித்தனர்.

மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம். இஸ்ஸதீன் உட்பட ஏனைய உறுப்பினர்கள் "புகைப்படங்களை கொழுவுவதாக இருந்தால் எல்லோருடைய புகைப் படங்களையும் கொழுவ வேண்டும், இல்லை என்றால் இங்கே யாருடையதை கொழுவ வேண்டுமோ அவர்களுடைய படங்களை மட்டும் கொழுவ வேண்டும்" என கூட்டாக தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து உறுப்பினர்களுக்கிடையில்விவாதங்கள்ஏற்பட்டது.

மேலும் வட மாகாண முதலமைச்சரின் புகைப்படமும் மன்னார் பிரதேசசபையில்கொழுவப்படாமை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இதன் போது வடமாகாண முதலமைச்சரின் படத்தை கொழுவ முயற்சி செய்த போதும் படம் கிடைக்கவில்லை என தவிசாளர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் வாக்குவாதம் இடம்பெற்ற நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பில் என்ன செய்யலாம் என மன்னார் பிரதேச சபையின் தலைவர் உறுப்பினர்களிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் வழங்கிய உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு எவற்றை கூறுகின்றதோ அதற்கு அமைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என உறுப்பினர்கள் தீர்மானம் மேற்கொண்டனர்.

அதற்கமைவாக யார் யாருடைய படங்களை கொழுவுவது என்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகமுடிவெடுக்கப்பட்டது.

## இன்று நாளும் கோளும்

11.05.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 28 ஆம் நாள்

ஏகாதசி மு.ப. 09.24 வரை | பூரட்டாதி மு.ப. 11.10 வரை | குளிகை மு.ப. 07.30-09.00

இராகுகாலம் 10.30- 12.00 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | நன்மை | போட்டி | தனம் | வெற்றி | அமைதி | பயம் | தாமதம் | நலம் | கோபம் | திறமை | புகழ் |

## யுத்தக் குற்ற விசாரணை:

# சர்வதேச நாடுகளுக்கு அருகதை இல்லை !



கொழும்பு, மே 11

யுத்தக் குற்ற விசாரணைகள் உட்பட போரின் போது நிகழ்ந்த பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, அரசாங்கத்தை வலியுறுத்த அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு அருகதை இல்லை என்று தேசிய நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சில் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்று உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு சர்வதேசத்தின் தலையீடு அவசியமற்றது. எமது அரசுக்கு ஆலோசனை வழங்க வெள்ளையர்களுக்கு எந்தவொரு தகுதியும் இல்லை. சிரியா, ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் நடைபெறும் நிகழ்வுகளை பார்க்கும் போது உண்மையில் எவருக்கும் எமக்கு ஆலோசனை வழங்கத் தகுதி இல்லை என்பது புலனாகும். நாம் சர்வதேச நாடுகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வோம் ஆனால் முடிவை எமது அரசாங்கம்தான் எடுக்கும்.

நாம் எவரது கூற்றுக்களையும் ஏற்றுச் செயற்பட முடியாது. மனித உரிமைகள் என்பது வெள்ளையர்களாலோ அல்லது ஐரோப்பாவில் இருந்தோ இறக்குமதி செய்த ஒன்று அல்ல. எமது வரலாற்றைப் பார்த்தால் நாம் தொண்டு தொட்டே மனித உரிமைகளை மதித்து வந்திருக்கின்றோம். எமது நாட்டில் வாழும் அனைத்து இனங்களும், மதங்களும் மனித உரிமைகளை முழுமையாக மதிக்கின்றன.

எவ்வாறாயினும் கொழும்பு உட்பட தென்பகுதிகளில் இடம்பெற்ற ஆட்கடத்தல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. ஆனால், யுத்த வலயத்துக்குள் இடம்பெற்ற குற்றச்செயல்களுக்கும், யுத்த வலயத்துக்கு வெளியில் இடம்பெற்ற குற்றச்செயல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கிறன. எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நாட்டில் உள்ள சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)





# ஊவா மாகாணத்தில் தாதிகள் போராட்டம்!

வெலிமட, மே 11

சம்பள உயர்வை வலியுறுத்தி ஊவா மாகாண அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள் நேற்றுக் காலை பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் போராட்டம் என்பனவற்றில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க தாதியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் அரச சலுகைகள் நேர்த்தியான முறையில் கிடைக்கப் பெறாமை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு கிடைக்காத பட்சத்தில் மீண்டும் பாரிய போராட்டத்தில்ஈடுபடுவோம்." என்று போராட்டத்தில் ஈடுபட்ட தாதியர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



கொழும்பு, மே 11

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணம், மட்டக்களப்பு ஆகிய டெங்குத் தொற்று அதிகம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் நேற்று விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்பொழுது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, டெங்குப் பெருக்கம் அதிகரித்துள்ளமையால், இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு முப்படையினர், பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் 700 பேர்நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# போலந்துப் பாதுகாப்பு ஆலோசகர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



கொழும்பு, மே 11

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கான போலந்து தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் ஸ்லோவாமி கோல்ட்ன், இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்காவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையுடன் இருபக்க பாதுகாப்பு உடன்படிக்கை செய்வதற்கு போலந்தின் உறுதிப்பாடு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பின் இறுதியில் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன. (ஆ)

# புகையாளிகள் 2078 பேர் கைது

கொழும்பு, மே 11

கடந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது, பொது இடங்களில் புகைப்பிடித்த 2 ஆயிரத்து 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இளம் வயதினருக்கு சிகெரட்டுக்களை விற்பனை செய்த 2 ஆயிரத்து 378 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

"போதைப்பொருளுடன் தொடர்புபட்ட குற்றங்கள் தொடர்பில் கடந்த வருடத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவரையில்44 ஆயிரத்து 59 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். 43 ஆயிரத்து 550 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பொது இடங்களில் புகைப்பிடிக்கும் நபர்களுக்கு எதிராக உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (ஆ)

# தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 2 ஆம் நாள் சர்வதேச மாநாடு



கொழும்பு, மே 11

பொது மக்களின் தகவலறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான சர்வதேச மாநாட்டின் இரண்டாவது நாள் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி ஒரு வருட கால நிறைவை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் நோர்வே தூதுவராலயம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில்,ஏழு நாடுகளைக் கொண்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இரண்டு நாள் நடைபெற்ற இந்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில், இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான நடைமுறைத் தன்மைகளும் அந்த உரிமைச் சட்டத்தின் பயன்பாடுகள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட நன்மைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டாவது நாள் கலந்துரையாடலின் போது, பாகிஸ்தான், இந்தியா மற்றும் நோர்வே போன்ற நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களை அந்த நாட்டு பிரதிநிதிகள் பகிர்ந்து கொண்டனர்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பயன்பாடுகளும் அதனை நடைமுறைப்படுத்தும் செயல் வடிவம் குறித்தும் பிற நாடுகளுக்குத் தெளிவுப்படுத்தப்பட்டது.

இதன்போது, எதிர்வரும் காலங்களில் ஏனைய நாடுகளின் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை முன்னுதாரணங்களாகக் கொண்டு இலங்கையில் இந்தச் சட்டத்தை வெற்றி பெறச்செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்த ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

இதற்கிடையில், இலங்கை ஊடகவியலாளர்களால் தகவலறியும் உரிமைச் சட்டம், தரம் ஆறு முதல் உயர்கல்வி வரையிலான மாணவர்களின் கல்வித் திட்டத்துக்குள் உள் வாங்கப்பட வேண்டும் என்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டது. இதனை தாம் கவனத்தில் எடுப்பதாகவும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

அத்துடன் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது கோரிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும், அவர்களின் பாதுகாப்பு உத்தரவாதம் குறித்தும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இதுவரையில் இலங்கையில் தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய பக்கச்சார் திட்டங்களே அவதானத்தில் கொள்ளப்பட்டிருந்ததாகவும், இந்த வருடம் முதல் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொது மக்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஊடகவியலாளர்களின் பங்களிப்பு அளப்பரியது என்பதோடு, ஊடகவியலாளர்கள் இதற்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (ஆ)

### இந்திய அதிகாரி– கபில
# சந்திப்பு

கொழும்பு, மே 11

இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ராஜேந்திர சிங்- பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன ஆகியோர் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இதன்போது, பாதுகாப்பு செயலாளர் மற்றும் இந்தியக் கடலோரப் பாதுகாப்புப்படை அதிகாரி ஆகியோருக்கு இடையில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஆ)

## குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, மே 11

காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு 1948 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கக் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மதிப்பீடு செய்து புதிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட உள்ளது.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

இதுதொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக இந்தத் துறையைச் சார்ந்த மற்றும் தொடர்புபட்ட முக்கியஸ்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால், புதிய குடிவரவு குடியகல்வு சட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டிய கட்டளைகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் மூலம் பிரேரிக்கப்பட்டுள்ள கட்டளைகளை உள்ளடக்கிய புதிய குடிவரவு, குடியகல்வு சட்டத் திருத்துக்கான சட்டவரைபுக்கு ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உள்நாட்டு அலுவல்கள் , வடமேல் அபிவிருத்தி அமைச்சர் எஸ் .பி. நாவின்ன ஆகியோர் சமர்ப்பித்த கூட்டு ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. (ஆ)

# அரசின் ஸ்திரத் தன்மை நாட்டுக்கு அவசியம்

## சரத் அமுனுகம தெரிவிப்பு



கொழும்பு, மே 11

அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மை தற்போது நாட்டுக்கு மிக முக்கியம் என அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.


அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியல் ஸ்திரம் அற்ற நாட்டில் சர்வதேச முதலீடுகள் உள்வாங்கப்படாது. எனவே, எஞ்சிய இரண்டு வருடங்களும் ஒரு உறுதியான அரசாங்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அப்போது தான் பொருளாதார ரீதியான இலக்குகளை வெற்றி கொள்ள முடியும் . அவ்வாறு இல்லை என்றால் சர்வதேச நாடுகள் வேறு நாடுகளில் முதலீடுகளைச் செய்யும். ஏனெனில் அவர்களுக்கு முதலீடு செய்வதற்கு இலங்கை மாத்திரம் இல்லை. வேறு நாடுகள் உள்ளன. கடற்கரையில் ஒரு பெண் மாத்திரம் அல்ல: தெரிவுக்குப் பல பெண்கள் இருப்பார்கள். அவ்வாறு தான் சர்வதேச முதலீட்டு செயற்பாடுகளுக்கும் தெரிவுக்குப் பல நாடுகள் உள்ளன. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் கவனத்துடன் செயற்படவேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# யாழ். போதனாவில் புனர்வாழ்வு நிலையம்

கொழும்பு, மே 11

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 3 மாடிக்கட்டடத்தில் புனர்வாழ்வு மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்களை வழங்குவதல் தொடர்பில் 3 வருடப் பயிற்சியை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.




இதன்மூலம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தில் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளது.

2017 ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலையில் 39 ஆயிரத்து 390 சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 12 ஆயிரத்து 486 சத்திர சிகிச்சைகள், புனரமைப்பு பாதுகாப்புக்குத் தேவையான மாற்றுச் சத்திரசிகிச்சைகளாகும்.

இந்தப் புனரமைப்பு பாதுகாப்புச் சேவைக்காக வைத்தியசாலையில் பௌதீக வசதி மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சிகளை மேம்படுத்தவேண்டும் என்று அடையாளம்காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக யாழ் . போதனா வைத்தியசாலையில் 3 மாடி கட்டடத்தில் புனரமைப்பு மத்திய நிலையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான உபகரணங்களை விநியோகிப்பதற்கும் சம்பந்தப்பட்ட பணியாளர் சபையின் ஆற்றலை மேம்படுத்துவதற்காகவும் 3 வருட பயிற்சி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான உத்ததேசத்திட்டத்தை 605 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப் படுத்துவதற்கு சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

(ஆ)

# மாகாணத் திறைசேரிக்கு நிதி ஒதுக்கீடு செய்க!

யாழ்ப்பாணம், மே 11

வட மாகாணத்தில் கடமையாற்றுகின்ற அரச வைத்தியர்களுக்கான மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படவில்லை. இந்தக் கொடுப்பனவுக்கான நிதி ஒதுக்கீட்டை, மத்திய அரசு மாகாணத் திறைசேரிக்கு வழங்க வேண்டும் என்று வடமாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண வைத்தியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"வட மாகாண வைத்தியர்களுக்கு மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு வீதம் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதிகரிக்கப்பட்ட வீதத்தின் அடிப்படையில் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பழைய வீதத்திலேயே அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசில் இருந்து மாகாண திறைசேரிக்குப் பழைய வீதத்திலான கொடுப்பனவுகள் வழங்குவதற்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. புதிய வீதத்தின் அடிப்படையில் வழங்குவதாக இருந்தால் மொத்தமாக 280 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வட மாகாண வைத்திய அதிகாரிகள் என்னுடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பில் மாகாண திறைசேரிப் பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து உள்ளேன். மத்திய நிதி அமைச்சுக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு, மத்திய திறைசேரியிடம் இருந்து இதற்கான நிதியை ஒதுக்கித்தருமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மாகாணப் பிரதிப் பிரதம நிதிச் செயலாளர் கொழும்புக்கு நேரடியாகச் சென்று இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடினார். நாமும் இந்த நிதியைப் பெற்றுக்கொள்ளத் தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம்.

இந்த நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை வடமாகாண வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் வைத்தியர்கள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளனர். இதன் காரணமாக வைத்திய சேவைகள் பாதிப்படைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே மத்திய அரசு உடனடியாக இந்த விடயத்தைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



## அப்ப ஒண்டுக்குப் போகட்டோ? இரண்டுக்குப் போகட்டோ? எண்டு கேட்டபடி!

எல்லாத்திலையும் இழுபறிதான். ஒருதர் ஒரு பக்கம் இழுத்தால் மற்றவை மற்றப் பக்கம் இழுக்கினம். உப்பிடியே மாறி மாறி ஒருத்தரை ஒருதர் குற்றஞ் சொல்லிக் கொண்டு குறுக்காலை மறுக்காலை இழுத்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான். காலம் போக மற்றத்தரம் எலக்சனும் வந்துவிடும். பிறகு அதின்ரை சோலியளைப் பாக்கத்தான் நேரம் சரியே ஒழிய தொடர்ந்து ஒண்டைச் சரிவரச் செய்ய ஏலாத சூழலாக்கிடக்கு.– எண்டு முதலி திட்டுறான்.

இப்ப முள்ளிவாய்க்காலிலை என்ன பிரச்சினை எண்டு கேக்கிறன். போன முறை காக்கா அண்ணை சொன்னபடி எல்லாம் வடிவா நடந்ததுதானே? இந்த முறை என்ன புதுசா அதைப் பற்றிப் பிச்சுப் பிடுங்கக் கிடக்கு? "ஒற்றுமையாய் வாரீர் என்ற கோஷங்களுக்கு மத்தியில் வெவ்வேறு நோக்கங்கள் இருப்பதாகக் கருதுகிறோம்" எண்டும் காக்கா அண்ணை சொல்லி இருக்கிறார். அப்ப ஒருத்தரும் உண்மையான நெஞ்சோடை இல்லை எண்டதுதான் என்ரை விளக்கம்.

இந்தப் பெரிய கட்சியளும், அதுக்குள்ளை பெரிய பெரிய ஆக்களும் இருந்தும் ஒருதராலையும் முள்ளிவாய்க்காலிலை நடந்தது இனப் படுகொலை எண்டு சும்மா பகிடிக்குத்தன்னும் சொல்லேலாமல் போச்சுது. இனப் படுகொலை எண்ட வாசகத்தை நாடாளுமன்றத்திலை ஒருதராலையும் சொல்லேலாமல் போச்சுது எல்லே? ஆகத் துணிஞ்சு வட மாகாண சபை மாத்திரம்தான் இனப்படுகொலை எண்ட தீர்மானத்தை நிறைவேற்றினது. என்ன? நான் இப்பிடிச் சொல்லுறதாலை என்னை சீ.எம்முக்கு சப்போட்டான ஆள் எண்டு நினைக்க வேண்டாம் பிளீஸ். நான் ஒரு சாதாரண ஆள். எந்த நாளும் காலமை வந்து இந்தப் பேப்பருகளைப் பிரட்டிப் பிரட்டிப் பாக்கிறதாலை ஏதோ கொஞ்சத்தை அறிஞ்சு வைச்சிருக்கிறன். அதாலைதான் சொல்லுறன். இந்த யூனிவசிட்டிப் பெடியள் எல்லாத்தையும் அனுசரிச்சுப் போறதுதான் நல்லது எண்டு. இப்ப எங்களுக்குத் தேவை அமைதியான முறையிலை எங்கடை தமிழ் ஆக்கள் தங்கடை தங்கடை குடும்பத்திலை இழந்தாக்களை நினைச்சுச் சுடரை ஏத்தி ஒரு துளி கண்ணீரை அந்த இடத்திலை விட்டிட்டு வரவேணும் எண்டதே ஒழிய வேறை ஒரு நோக்கமும் அவையிட்டை இல்லை.

அதுதான் இண்டைக்குக் காலமை பேப்பர் கடைக்கு வந்த ஒரு மாவீரர் குடும்பத்தைச் சேந்த ஒராள் சொன்னார் மாவீரர் தின நாளை அரசியல் ஆக்கத் துடிக்கிற எல்லாப் புல்லுருவியளையும் அவையின்ரை ஆட்டத்தை அடக்கி ஒரு புள்ளியிலை நிப்பாட்டத் தெரியாமல் இல்லை. ஆனால் நாங்கள் பத்தும் பலதையும் யோசிச்சுத்தான் அடங்கி, ஒடுங்கி இருக்கிறம். இப்ப இருக்கிற சூழ்நிலையிலை நாங்கள் ஒரு புல்லுச் செதுக்கிற சத்தகத்தைத் தன்னும் கையிலை எடுத்தாலும் அது புனர்வாழ்வுக்கை போய் வந்திருக்கிற எல்லாரையும் பாதிக்கும் எல்லே? அதாலை வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டியதாயிருக்கு... எண்டு.

உண்மைதான் புலியள் இருக்கேக்கை கக்கூசுக்குப் போகட்டே? ஒண்டுக்கிருக்கப் போகட்டே? எண்டு ஒவ்வொண்டையும் அவையிட்டை கேட்டுக் கேட்டுச் செய்த பரதேசியள் எல்லாம் இப்ப கொம்பேறி மூக்கன் வாலைக் குத்தி எழும்பிநிண்டு ஆடுறமாதிரி ஆடினம். அப்ப அவையளுக்குப் பயந்து ஒழுக்கமா இருந்தியளோ, இல்லையோ, ஒழுக்கமா இருக்கிறதா நடிச்சனியள். இல்லையே? அது மாதிரி இப்பவும் இருங்கோ இல்லாட்டி அப்பிடி இருக்கிறதா நடியுங்கோ. அதை விட்டிட்டு அவை தாங்களும் குழம்பி மற்றாக்களையும் குழப்பிச் சனத்தைச் சரியா அரியண்டப்படுத்தினம்.

எப்பவும் எல்லாத்திலையும் அரசியல் வாயாது. ஒரு நாளைக்கு உந்தப் பொட்டுக் கேடெல்லாம் சபை சந்திக்கு வரும். அப்ப பாப்பம் ஆர் உண்மை எண்டும் ஆர் போலி எண்டும். நான் நினைக்கிறன் சரியோ? பிழையோ? தெரியேல்லை. சின்னஞ் சிறுசுகளை "ஆடெடா.. ராமா ஆடு" எண்டு ஆரோ ஏவி விடுகினம்போலை கிடக்கு. அவங்களுக்கும் நன்மை தின்மை தெரியாத வயசு. பிறகு பொறுப்பு வாற நேரம் தாங்கள் பிழை விட்டிட்டம் எண்டு யோசிப்பினம், என்ன?

**- வில்லங்கம் விநாசி**

# மனோகணேசன் சிங்கள விசுவாசி

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அவசிய மில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்த கருத்தானது சிங்கள பௌத்த அரசாங்கத்தின் மீது அவர் கொண்டுள்ள அடிமை விசுவாசத்தையே வெளிப்படுத்து கின்றது என வட மாகாண சபை உறுப் பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்காவின் பல இரகசிய அறிக் கைகள் உட்பட பல தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்த நிலையில், அதில் இலங் கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் இலங்கை தொடர்பாக அனுப்பிய அறிக்கை யிலேயே, அமைச்சர் மனோகணே சன்போர்க் குற்ற விசாரணை அவசியமில்லை என கூறி யிருந்தமையை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் - தற்போதும் அவர் தாம் அங்கம் வகிக்கக் கூடிய பௌத்த சிங்கள அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக அவர் கூறிய கருத்தானது வேதனையளிப் பதுடன் சிங்கள பௌத்த அரசாங்கத்தின் மீதான அவரது அடிமை விசுவாசத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது என்றார்.

## தொடர்ச்சிகள்

**ஒற்றுமையுடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களித்த பசீர் காக்கா என அழைக்கப்படும் முத்துக்குமார் மனோகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நினைவேந்தலை மக்கள் எவ்வாறு ஒற்றுமையுடன் நினைவு கூர்ந்தார்களோ அதேபோன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையும் நினைவு கூர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழரின் தேசிய விடுதலைப்போராட் டத்தில் நீண்டகாலம் பங்களித்த பாலிப்போடி சின்னத் துரை (யோகன்-பாதர்-மட்டக்களப்பு, முத்துக்குமார் மனோகர் (பசீர்-காக்கா-யாழ்ப்பாணம்), ஆம்பலிங்கம் ரவீந்திரா (ரூபன் - திருமலை) ஆகிய மூவரும் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்;

இன்றைய சூழலில் எமக்கான கடமையைச் செய் யாமலிருப்பது எம்மோடு நீண்டகாலம் பயணித்து மாவீரர்களான எமது நண்பர்கள், சகோதரிகளுக்கும், விடுதலையை நேசித்து முள்ளிவாய்க்கால் வரை எம்மோடு பயணித்து கடல், வான், தரை ஆகிய மும்முனைத் தாக் குதல்களால் இனப் படுகொலைக்குள்ளான எமது உறவு களின் ஆத்மாக்களுக்கு செய்யும் துரோகம் எனக் கருது கிறோம்

கடந்த மாவீரர்நாள் தொடர்பாக எங்களில் ஒருவரான முத்துக்குமார் மனோகர் (காக்கா) விடுத்த வேண்டுகோளை ஏற்று எவ்வித அரசியல் கலப்புமின்றி அமைதியான முறையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மிகவும் கட்டுப் பாடாக அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் நிகழ்வுகள் நடந்தேறின. ஒழுங்கான நேர்த்தியான தமிழ்த் தலை மையால் 2009 மே 18 வரை வழிநடத்தப்பட்டோம் என் பதை முரசறைந்து கூறினர் எமது மக்கள். இதற்காக முள்ளிவாய்க்கால் வரை பயணித்த நாங்கள் மூவரும் எமது மக்களுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி நன்றி கூறுகிறோம். இந்த அமைதிச் சூழலைக் குழப்பும் விதமாக செயற் படாதிருந்தமைக்காக ஊடகங்களுக்கும் எமது சிறப்பான நன்றிகள்.

ஏற்கனவே நினைவுகூரல் நிகழ்வுகளை வழிநடத்த சமூக, சமயத் தலைவர்கள் அடங்கிய குழுவொன்றினை உருவாக்கி அந்நிகழ்வுகளின் நோக்கத்தையும், புனிதத்தி னையும் சரியான முறையில் கொண்டு செல்ல வேண்டு மென இம்மண்ணினை நேசித்த பலரும் ஆலோசனை வழங்கியிருந்தனர். இன்றுள்ள பதற்றமான சூழலில் உடனடியாக இது சாத்தியப்படாதென்றே எமக்குத் தோன்றுகிறது.

ஒற்றுமையாய் வாரீர் என்ற கோஷங்களுக்கு மத்தியில் வெவ்வேறு நோக்கங்கள் இருப்பதாகக் கருதுகிறோம். தாம் எதிர்பார்த்த ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெறா விட்டால் குழப்பங்கள் ஏற்படும் என எச்சரிப்பது எம்மை வேதனையில் ஆழ்த்துகிறது. எமது உறவுகளுக்காக மட்டுமல்லாது இன்றைய நிலைமைக்காகவும் சேர்த்து கண்ணீரைப் பங்கு போடுகிறது. மாவீரர்நாள் நிகழ்வுகளில் அமைதியைப் பேணிய எமது மக்களின் அமைதியையும் கட்டுப்பாட்டையும் மதிக்காதோடு எமது கடந்தகாலப் பங்களிப்பை எச்சரிப்போர் நிராகரிப்பதாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இந்த விடுதலைப்போராட்டத்தில் யாழ். பல்கலைக் கழகம் தொடர்ச்சியாக ஆற்றிய பங்களிப்பை போராட் டத்தின் பங்காளர்களான நாம் நன்கு அறிவோம். மாவீரர் நாள் ' தொடர்பான தனது வேண்டுகோளில் மனோகர் (பசீர் காக்கா) இதனை மறக்காது குறிப்பிட்டிருந்தார் என்பதையும் நினைவு படுத்துகிறோம்.

கிழக்கு மாகாணசபையில் தமிழரின் பிரதான கட்சி ஆட்சியில் பங்காளராக இருந்தது. இக்கட்சியின் செயலர் உட்பட இருவர் அமைச்சர்களாக இருந்தனர். இவர்களில் எவரும் இனப்படுகொலை என்ற தீர்மானத்தை தமது சபையில் நிறைவேற்றக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயவேயில்லை. இது தமது வரலாற்றுக்கடமை என்பதை உணரவுமில்லை. நடந்தவைகள் இனப்படு கொலை என்ற வகையறைக்குள் அடங்கமாட்டாதென்று வாதிடும் திறன்மிக்கோரால் தவறாக வழிநடத்தப்பட்டி ருந்தனர்.

எது எவ்வாறிருந்தாலும் உலகத்தைப் பொறுத்தவரை வடமாகாணசபை நிறைவேற்றிய இனப்படுகொலை என்ற தீர்மானம் காத்திரமானது, எமது மக்களுக்கு இழைக் கப்பட்ட அநீதியை உலகுக்கு ஆணித்தரமாக எடுத்து ரைத்தது. இதன் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையில் எவரும் செயலாற்றக் கூடாதெனக் கருதுகிறோம். இத் தீர்மானத்தைக் கொண்டு வந்த வடக்கு முதல்வரின் பங் களிப்பை வேறெவரினதும் கேவைகளக்கோ. நோக்கங் களுக்கோ நிராகரிப்பது ஏற்புடையதல்ல.

இந்த மே 18 க்குப்பின் நாம் எதிர்பார்க்கும் அரசியல் கலப்பற்ற, மதகுருமார் தலைமையிலான நினைவேந்தல் குழுக்களின் உருவாக்கம் குறித்து விடுக்கப்படும் பொது அறிவித்தலொன்றின் பிரகாரம் செயற்படவேண்டும் என்றும் மாவீரர்நாள், திலீபனின் நினைவு, அன்னைபூபதி, மாமனிதர் சிவராம் நினைவு உட்பட மே 18 நிகழ்வையும் கூட இந்நினைவேந்தல் குழுக்களின் அறிவுறுத்தல் பிரகா ரம் நடைமுறைப் படுத்த வேண்டுமென எதிர்பார்க்கிறோம். எமது விடுதலைப்போராட்டத்தில் தம்மை இழந்த மற்றும் பலியான அனைவரையும் மதிக்கும் அனைவரும் இவ்வேண்டுகோளை ஏற்பார்கள் என நம்புகிறோம்.

அன்னை பூபதி மற்றும் மாமனிதர் சிவராமின் நினைவு நிகழ்வுகளில் தவறாக வழிநடத்தப்பட்டோரால் நிகழ்ந்த வேதனையான சம்பவங்கள் அத்தியாகங்களுக்கு மதிப்ப ளித்த எமது மக்களின் ஜீரணிக்கமுடியாதவை.

எமது எதிர்பார்ப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத் துத் தரப்புடனும் கலந்துரையாட ஆர்வமாக உள்ளோம். தயவு செய்து எமது வேண்டுகோளுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனஎதிர்பார்க்கிறோம். இருதலைமுறையினராக இந்தப்போராட்டத்தில் பங்களித்த எமது வேண்டுகோளை நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகிறோம் எனக் கூறப்பட்டுள்ளது.

**கோத்தா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு நீண்ட காலம் தேவைப்படுகின்றது என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் , கடந்த அரசாங்கத்தில் குற்றமிழைத்தவர்களை கைது செய்யவும் சிறிய காலம் தேவைப்பட்டது.

இதற்கமைய, ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சாலிய விக்ரமசூரிய ஆகியோர் சில மாதங்கள் கடந்த பின்னரே கைது செய்யப் பட்டனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கேள்வி எழுப்புவதற்கு தோன்றவில்லையா என கேள்வியெழுப்பி யதுடன் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட பலரையும் கைது செய்ய முடியவில்லை அது தொடர்பில் மறந்து விட்டீர்களா எனவும் வினவினார்.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஏன் கைது செய்யமுடியவில்லை? அதற்கான காரணம் என்ன? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதன்போது கோத்தபாய ராஜபக்ஷவை ஏன் கைது செய்யமுடியவில்லை என தனக்கும் தெரியவில்லை என்றார்.

டி.ஏ.ராஜபக்ஷ நினைவகம் அமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய தம்மை கைது செய்ய தடை விதிக்குமாறு கோரி கோத்தபாய ராஜபக்ஷ மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

பொதுச் சொத்துகள் சட்ட மூலத்தின் கீழ் தம்மை கைது செய்ய முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்து, குறித்த விசாரணைகளை இடைநிறுத்த இடைக்கால தடையுத் தரவை பிறப்பிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என அமைச்சர் தெரிவித்தார்.

**சத்தியலிங்கம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் பதில் வழங்கியிருந்தார்.

முதலமைச்சர் தனது பதிலில், சத்தியலிங்கம் சுகாதார அமைச்சராக இருந்து பதவி விலகும்போது 750 அமைச்சு சார்ந்த கோவைகளை எடுத்து சென்றதாக அறிந்தேன். பின்னர் அந்த கோவைகள் மீள கொண்டுவந்து வைக்கப்பட் டதாகவும் அறிந்தேன்.

அதனடிப்படையிலேயே ஊடகங்களுக்கு கருத்து கூறியிருந்தேன். ஆனால் ஊடகங்கள் கோவையை சத்தி யலிங்கம் எடுத்துச் சென்றார் என செய்தியை பிரசுரித்தன. கோவைகள் திரும்பி வந்துவிட்டன என செய்தியை பிரசுரிக்கவில்லை. ஆகவே ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து பேசிப் பயனில்லை என்றார்.

இதனையடுத்து சபையில் கருத்து தெரிவித்த அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், முன்னாள் அமைச்சர் ப. சத்தியலிங்கம் குற்றமற்றவர். அவர் மீது சபையில் எந்தவொரு குற்றச்சாட்டுக்களும் இல்லை என கூறினார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் வி.தவநாதன், சத்தியலிங்கம் சுகாதார அமைச்சு சார்ந்த கோவைகளை எடுத்து சென்றதாக முதலமைச்சர் கூறினார். பின்னர் அந்த கோவைகள் திரும்பிவிட்டதாகவும் கூறினார். ஆகவே ஒரு அமைச்சு சார்ந்த கோவைகளை அமைச்சர் பதவி விலகும் போது எடுத்துச் செல்வது குற்றம் இல்லையா?

மேலும் சத்தியலிங்கம் குற்றமற்றவர் என்றால் மிகுதி 3 அமைச்சர்கள் குற்றவாளிகளா? சுற்றவாளிகளா? என கேள்வி எழுப்பினார். ஆனாலும் எதிர்க்கட்சி உறுப்பினர் வி.தவநாதனின் கேள்விக்கு இறுதிவரை சரியான பதில் கொடுக்கப்படவில்லை.

**அரசுக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசரின் அதிகாரங்களை அரசியல்வாதிகள் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். விசேட நீதிமன்றங்களை அமைக்கும் அதிகாரம் பிரதம நீதியரசருக்கே காணப் படுகின்றது.

இந்த அதிகாரத்தை அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கும் நோக்கில் புதிய சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களை அரசியல் மயப்படுத்தும் முயற்சிகளாகவே இந்த விடயங்களை நோக்க வேண்டும்.

கள்வர்களை பிடிப்பதற்காக இந்த சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக அரசியல்வாதிகளை சிறையில் அடைக்கும் நோக்கில் சட்டம் உரு வாக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

**மக்களின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கியுள்ளது.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத விவகாரங்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் இணைந்து முன்வைத்த யோச னைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**முன்னாள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதற் கான காரணம் என்ன என எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் வாய்மொழி மூல வினா ஒன்றை எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளிக்கும்போதே முதல மைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது முதலமைச்சர் மேலும் கூறுகையில், கல்வி மற்றும் விவசாய அமைச்சுக்களின் செயலா ளர்களை மாற்றம் செய்யாமல் நடத்தப்படும் விசாரணை பலனளிக்காது என்பதாலேயே நாம் அமைதியாக இருந் தோம். இப்போது அந்த அமைச்சுக்கள் இரண்டினதும் செயலாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

ஆகவே இதன்போது சட்டரீதியாக விசாரித்து குற்றவாளிகள் என்றால் சட்டரீதியாக தண்டனை வழங் குவதற்கான விசாரணைக் குழு ஒன்றுக்காக பிரதம செயலாளரிடம் பரிந்துரை செய்துள்ளேன் என்றார்.

**மே 18...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் இந்தப் பிரகடனத்துக்கான பிரேரணையை சபைக்கு கொண்டுவந்தார்.

மே-18ம் திகதியை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாளாகவும், தமிழ்த்தேசிய இனத்தின் துக்க நாளாகவும் வடமாகாணசபை பிரகடனப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரேரணையை மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் வழிமொழிந்தார். இதனை தொடர்ந்து சபையில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

**தந்தையின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலுக்குச் செல்கின்ற போது தனது மகளையும் முன்பள்ளிக்கு ஏற்றிச்சென்று இறக்கிவிடுவது வழக்கமாக கொண்டிருந்தார் தந்தை.

அவ்வாறே கடந்த புதன்கிழமையும் காலை வீட்டிருந்து வானில் மகளை ஏற்றிக்கொண்டு சென்ற தந்தை முன் பள்ளியில் மகளை இறக்கிவிட்டு வாகனத்தை திருப்பிய போது வழமைக்கு மாறாக மகள் வாகனத்தின் முன் பகுதியின் ஊடாக முன்பள்ளிக்கு நுழைவதற்கு எத்தனித்த போது வாகனத்துடன் மோதுண்டுள்ளார்.

உடனடியாக தந்தை மகளை செட்டிக்குளம் வைத் தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை அங்கிருந்து அவசரமாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிசை மேற் கொள்ளப் பட்டது இருந்தும் வைத்தியர்களால் சிறுமியின் உயிரை காப்பாற்ற முடியவில்லை. சிறுமி நேற்று மதியம் உயி ரிழந்தார்.

இறந்த சிறுமி அவர்களின் ஒரேயொரு மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் அந்த பிரதேசத்தில் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெ. கைதிகளை விடுவித்தது வடகொரியா

பியாங்யாங், மே 11

அமெரிக்க, வடகொரியத் தலைவர்களின் பேச்சுவார்த்தைக்கு முன், நல்லெண்ண நடவடிக்கையாக வடகொரியச் சிறையில் இருந்த மூன்று அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ஆகியோரின் சந்திப்பின் போது பேச வேண்டிய விடயங்கள் குறித்து விவாதிப்பதற்காக, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மைக் பாம்பியோ, பியாங்யாங் சென்றுள்ளார். அவருடன் நடந்த சந்திப்புக்குப் பிறகு வடகொரிய சிறைகளில் இருந்த 3 அமெரிக்கர்களை அந்த நாடு விடுவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# சோமாலியாவில் தாக்குதல்: 5 பேர் சாவு!



மொகடிஷூ, மே 11

சோமாலியா நாட்டின் தலைநகர் மொகடிஷூவில் அமைந்துள்ள சந்தை ஒன்றில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில், 5 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதலில், 10 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் என முதற் கட்டத் தகவல் வெளியாகி உள்ளது. படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அல் கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக சோமாலியாவில் இயங்கிவரும் அல் ஷபாப் பயங்கரவாதிகள், அவ்வப்போது அங்கு வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் மொகடிஷூ நகரில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 14 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ரன்பீரும் அலியாவும் திடீர் காதல்



மும்பை, மே 11

ஹிந்தி நடிகர் ரன்பீர் கபூருக்கும், நடிகை அலியா பட்டுக்கும் இடையே புதிதாக திடீர் காதல் மலர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரகசியமாகச் சந்தித்துக் காதலை வளர்த்த இருவரும், மும்பையில் கடந்த திங்கட்கிழமை நடந்த நடிகை சோனம் கபூர் திருமணத்தில் ஜோடியாக கைகோர்த்து வந்து, தமது காதலை உறுதிப்படுத்தி உள்ளனர்.

ஹிந்தித் திரையுலக பழம்பெரும் நட்சத்திரத் தம்பதியான ரிஷிகபூர்-நீத்து சிங் ஆகியோரின் மகன்தான் ரன்பீர் கபூர். இவர் ஹிந்தியில் முன்னணி கதாநாயகனாக இருக்கிறார். ரன்பீர் கபூருக்கும், ஹிந்தி நடிகை கத்ரினா கைப்புக்கும் சில வருடங்களுக்கு முன்பு காதல் மலர்ந்தது. இருவரும் ஜோடியாகச் சுற்றினார்கள். திருமணம் செய்துகொள்வார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் திடீரென்று கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தனர்.

அதன்பிறகு ஒருவரைஒருவர் பார்ப்பதைத் தவிர்த்து வந்த இருவரும் , அனுஷ்கா சர்மா-விராட் கோஹ்லி திருமணத்தில் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது. இருவரும் பேசிக்கொண்டனர். அவர்களுக்கு மீண்டும் காதல் மலரும் என்று கணித்த நிலையில், முறிந்தது முறிந்ததுதான் என்ற ரீதியில் விலகி விட்டனர்.

அலியா பட் பிரபல ஹிந்தி இயக்குநரும், தயாரிப்பாளருமான மகேஷ் பட்டின் மகள் ஆவார்.

ரன்பீர் கபூர்-அலியாபட் காதல் விவகாரம் ஹிந்தி பட உலகில் பரபரப்பாக பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## 61 ஆண்டுகளுக்குப் பின்:

# மலேசியாவில் ஆட்சி மாற்றம் பிரதமரானார் மகாதிர்!



கோலாலம்பூர், மே 11

மலேசியாவில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், எதிர்க்கட்சிக் கூட்டணியைச் சேர்ந்த 92 வயதான முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் சுதந்திரமடைந்து 61 ஆண்டுகளுக்குப் பின் மலேசியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் பிரதமர் நஜீப் ரஜாக் தலைமையிலான ஆளும் பி. என். கட்சிக்கும், முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. இதில், ஒன்றரைக் கோடி மலேசிய மக்களில் 69 சதவீதம் பேர் வாக்களித்தனர்.

இதை அடுத்து, வாக்கு எண்ணிக்கையில், ஆளும் பி.என். கட்சி தலைமையிலான கூட்டணியை விட, மகாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றியது. 222 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்றத்தில், 112 இடங்களில் எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனை அடுத்து, 92 வயது நிரம்பிய மகாதிர் முகமது பிரதமராகப் பதவியேற்க உள்ளார். இதன்மூலம் உலகிலேயே மிகவும் வயதான பிரதமர் என்ற பெருமையை அவர் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# உத்தரவாதம் அளிக்காவிட்டால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்

## ஈரான் அதிரடி

தெஹ்ரான், மே 11

ஐரோப்பிய நாடுகள் உத்தரவாதம் அளிக்காவிட்டால் அணு ஆயுத ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்று ஈரான் மூத்த தலைவர் அலி கமேனி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக ஈரான் தொலைக்காட்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுகிறோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. இருந்தாலும் அணு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செயற்படுத்தப்போவதாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகள் கூறியுள்ளன. மேலும், தங்களது செயற்பாடுகளைத் தடுக்க வேண்டாம்எனவும்அந்த நாடுகள் அனைத்தும் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டுள்ளன.

வர்த்தக உறவுகளைத் தொடர்வோம் என்று ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்குத் தீர்க்கமான உத்தரவாதம் அளிக்காவிட்டால், சர்வதேச அணு ஆயுத ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# கிம்-ட்ரம்ப் சந்திப்பு: 3 நாளில் அறிவிப்பு!



வொஷிங்டன், மே 11

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் உடனான சந்திப்புக்கான நேரம் மற்றும் இடம் ஆகியன தொடர்பில் மூன்று நாட்களில் அறிவிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை அமெரிக்காவுக்குப் பகிரங்க அணு ஆயுத மிரட்டல் விடுத்து வந்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், அண்மைக்காலமாக தனது போக்கை முற்றிலுமாக மாற்றிக்கொண்டார். இனி அணு ஆயுதச் சோதனைகள் எதையும்நடத்தமாட்டோம் என்றும் அறிவித்தார். மேலும் பகையாளி நாடாக கருதிய தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னையும் சமீபத்தில் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பைச் சந்தித்து பேசுவதற்கு ஆர்வமாக இருப்பதாக கிம் ஜோங் உன் கூறினார். இதைத் தொடர்ந்து இரு தலைவர்களும் ஜூன் மாத மத்தியில் சந்தித்துப் பேசுவார்கள் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தச் சந்திப்பு எங்கு நடைபெறும் என்பது தொடர்பில் கூறப்படவில்லை. இதுபற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்று மட்டும் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ட்ரம்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கிம், ட்ரம்ப் ஆகியோரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பை சர்வதேச நாடுகள் அனைத்தும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# காங்கிரஸ் 'டீல்' கட்சி !



பெங்களூர் , மே 11

காங்கிரஸ் ஒரு 'டீல்' கட்சி. பக்குவமும், முதிர்ச்சியும் இல்லாத ஒருவரை, இந்த நாட்டின் பிரதமராக மக்கள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டசபைத் தேர்தல், நாளை நடக்க உள்ளது. இதனை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் ராகுல் ஆகியோர் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர்.

பெங்களூரில் வைத்து ஊடகவியலாளர்களிடம் ரா்குல் காந்தி பேசுகையில், அடுத்த தேர்தலில் காங்கிரஸுக்குப் பெரும்பான்மை கிடைத்தால், நான் பிரதமராகப் பதவியேற்பேன்." என்றார். அதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"மன்மோகன் பிரதமராக இருந்த போது மத்திய அரசை சோனியா, 'ரிமோட் கன்ட்ரோல்' மூலம் இயக்கினார். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக நாட்டு மக்களான உங்களிடம் தான் ரிமோட் கன்ட்ரோல் உள்ளது. ராகுலுக்கு இப்போது பிரதமர் நாற்காலி பற்றித் தான் முழு எண்ணமும் உள்ளது. எப்படியாவது பிரதமராகிவிட வேண்டும் என அவர் துடிக்கிறார்.

பிரதமர் பதவியில் அமரக் காங்கிரஸில் பல தலைவர்கள், 40 ஆண்டுகளாகக் காத்திருக்கின்றனர். திடீரென ஒருவர் வந்து வரிசையில் வாளியை வைத்து இடம் பிடித்து, 'நான் தான் அடுத்த பிரதமர்' என்கிறார் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் பற்றி அவர் கவலைப்படவில்லை. அவரது இந்த அறிவிப்பு எனக்கு ஆச்சரியமாக உள்ளது. கட்சியும், ஆட்சியும் தங்கள் குடும்பத்துக்குத்தான் சொந்தம் என்ற கர்வத்தைத் தான் , அவரது பேச்சு வெளிப்படுத்தி உள்ளது."என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# தென்னிந்திய நதிகளை இணைப்பதே கனவு



சென்னை, மே 11

தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் . இதுவே எனது கனவு என்று நடிகர் ரஜனிகாந்த் தெரிவித்துள்ளார்.

ரஜினிகாந்த் நடிப்பில் 'காலா' படத்தின் இசைவெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அவ்வப்போது இமயமலைக்குப் போவேன். அங்கே போவதே கங்கையை பார்க்கத்தான். தென்னிந்திய நதிகளை இணைப்பது தான் எனது நீண்ட நாள் ஆசை. நான் கண் மூடுவதற்கு முன்னால் அது நடக்க வேண்டும்.

இது ஒரு இசை வெளியீட்டு விழா மாதிரித் தெரியவில்லை. படத்தின் வெற்றி விழா மாதிரி இருக்கிறது. நான் கடைசியாக கொண்டாடிய வெற்றி விழா சிவாஜிதான். சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்த வெற்றி விழாவுக்கு வந்த கலைஞர் அன்று பேசினார். அவரது அந்தக் குரலை மறக்க முடியாது. அவரது குரலை மறுபடியும் கேட்க வேண்டும். 75 ஆண்டுகளாக ஒலித்த அந்தக் குரல், மீண்டும் ஒலிக்க மக்கள்காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் நானும் ஒருவன். விரைவில் அவரது குரல் ஒலிக்கும் என்று நம்புகிறேன்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# காலிறுதியில் கசட்கினா

மட்ரிட், மே 11

மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு ரஷ்ய வீராங்கனை டரியா கசட்கினா தகுதிபெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்றுப்போட்டியில் கசட்கினா, ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஷாவை எதிர்கொண்டார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் அபாரமாக ஆடிய கசட்கினா 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

முதல் செட்டில் ஆதிக்கத்தை செலுத்திய கசட்கினா 6-2 என முதல் செட்டை கைப்பற்றினார். எனினும் அடுத்த செட்டில் சிறப்பாக ஆடிய முகுருஷா 6-4 இரண்டாவது செட்டை கைப்பற்றி போட்டியை சமப்படுத்தினார்.

எவ்வாறாயினும் இறுதி செட்டில் ஆதிக்கம் செலுத்திய கசட்கினா 6-3 என கைப்பற்றி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

# பங்களாதேஷுடனான தொடரை இரத்து செய்தது ஆஸி




சிட்னி, மே 11

பங்காளதேஷ் அணி அவுஸ்ரேலியா சென்று விளையாட இருந்த தொடரை, அவுஸ்ரேலிய கிரிக்கெட்சபை இரத்து செய்துள்ளது.


பங்காளதேஷ் அணி ஓகஸ்ட் மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை அவுஸ்ரேலியா சென்று விளையாட இருந்தது. 2003ஆம் ஆண்டுக்குப்பின் தற்போதுதான் பங்காளதேஷ், அவுஸ்ரேலியா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடும் வகையில் ஐசிசியின் எதிர்கால சுற்றுப்பயண திட்டத்தில் அட்டவணை தயார் செய்யப்பட்டிருந்தது.

அவுஸ்ரேலியாவில் முக்கியமான கால்பந்து தொடர் நடைபெற இருப்பதாகவும், இதனால் போட்டி ஒளிப் பரப்பு உரிமையில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதாலும் தொடரை இரத்து செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைக்கு நாங்கள் சில தெரிவுகளை முன்மொழிந்துள்ளோம். அவர்களின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று பங்காளதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# டெல்லியைச் சிதறச் செய்து சொல்லியடித்த கில்லிகள்





டெல்லி, மே 11

பந்து வீச்சில் கோட்டை விட்ட போதும் தவான் - வில்லியம்சன் கூட்டணியின் துடுப்பாட்டத் தாக்குதலில் டெல்லியைப் பணிய வைத்தது ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி.

நேற்று நடைபெற்ற ஐ.பி.எல் ஆட்டத்தில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியும் , ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி, சன்ரைசர்ஸ் அணியின் முன்னணிப் பந்துவீச்சாளர்களிடம் முதல் மூன்று விக்கெட்டுகளை வேகமாகப் பறிகொடுத்தது. ஆனால் அதன் பின்னர் டெல்லி அணியின் ரிஷப் பண்ட், ஹைதராபாத் அணியின் பந்துவீச்சுக்களை பறக்க விட்டார். அவருக்குத் துணையாக மறுமுனையில் எவரும் நிலைத்து நின்று ஆடாதபோதும், தனித்து நின்று துணிச்சலாக சன்ரைசர்ஸ் அணிக்கு மரணபயத்தை உண்டாக்கி சதமடித்தார் ரிஷப் பண்ட். இறுதிவரை ஆட்டமிழக்காது 63 பந்துகளில் அவர் 128 ஓட்டங்களை எடுத்தார். இதில் 15 பவுண்டரிகளும், 7 சிக்ஸர்களும் அடக்கம். ஷா 9, ஜேசன் ரோய் 9, ஸ்ரேயாஸ் அய்யர் 3, பட்டேல் 24, மக்ஸ்வெல் 9, விஜய் சங்கர் 0 ஓட்டங்களையே எடுத்தனர். டெல்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி, ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அந்த அணியின் ஷிகர் தவானும், அணித்தலைவர் வில்லியம்சனும் பொறுப்போடும், அதிரடியாகவும் துடுப்பாட்டத் தாக்குதலை நிகழ்த்தி டெல்லி அணியை நிலைகுலைய வைத்தனர். டெல்லி அணியின் பந்துவீச்சாளர்கள் எவ்வளவு முயன்றும் இருவரையும் ஆட்டமிழக்கவைக்க முடியவில்லை. இதனால் ஹைதராபாத் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் இலக்கை அடைந்து, 9 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி அணியைச் சொல்லியடித்தது. தவான் 92 ஓட்டங்களையும், வில்லியம்சன் 84 ஓட்டங்களையும் அநாசயமாக எடுத்து ஆட்டமிழக்காதிருந்தனர். ஆட்ட நாயகனாகத் தவான் தெரிவானார். (அ)

# மேற்கிந்திய தொடருக்கான முன்னோடி இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, மே 11

இலங்கை - மே.தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஜூன் 6ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டித் தொடருக்கான 22 பேர் கொண்ட முதற்கட்ட குழாமுக்கான பயிற்சி நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் சபை கண்டியில் ஆரம்பித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் உபாதைக்குள்ளாகியுள்ள திமுத் கருணாரத்ன நீக்கப்பட்டுள்ள்ளார். உள்ளூர் ஒருநாள் போட்டிகளுக்காக பயிற்சியில் ஈடுபட்ட போது, அவரின் இடது கையின் ஆள்காட்டி விரலில் பலத்த உபாதை ஏற்பட்டிருந்தது.

பயிற்சியில் ஈடுபட்டு வரும் முதற்கட்ட அணிக்குழாமின் விபரம்: தினேஷ் சந்திமால் (தலைவர்), எஞ்சலோ மெத்தியூஸ், குசல் பெரேரா, குசால் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, ரொஷான் சில்வா, நிரோஷன் டிக்வெல்ல,




மஹேல உடவத்த, தசுன் சானக, ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, ஜெப்ரி வெண்டர்சே, அகில தனஞ்சய, லக்ஷான் சந்தகன், சுராங்க லக்மால், லஹிரு கமகே, லஹிரு குமார, செஹான் மதுசங்க, கசுன் ராஜித, அஷித பெர்னாண்டோ, நிஷால தாரக.

# வரலாற்று சாதனை




இங்கிலாந்து, மே 11

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் தொடர் நிறைவுபெறும் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் இந்த போட்டித் தொடரில் அற்புமதமாக விளையாடி வரும் மென்செஸ்டர் சிட்டி அணி, இம்முறை மொத்தமாக 97 புள்ளிகளை பெற்று, ஒரு சீசனில் அதிக புள்ளிகளை பெற்ற அணி என்ற சாதனையை படைத்துள்ளது.

94 புள்ளிகளுடன் இருந்த மென்செஸ்டர் சிட்டி அணி நேற்று அதிகாலை நடைபெற்ற போட்டியில் பிரைட்டன் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது.

இந்த வெற்றியுடன் 3 புள்ளிகள் அதிகரித்து வரலாற்று சாதனையை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 2004-2005 சீசனில் செல்ஸி அணி 95 புள்ளிகளை பெற்றிருந்தது. இதுவே பிரீமியர் லீக்கின் அதிக புள்ளிகள் சாதனையாக இருந்தது.

இந்நிலையில் மென்செஸ்டர் சிட்டி அணிக்கு இன்னுமொரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில், 100 புள்ளிகளை எட்டுவதே இலக்கு என மென்செஸ்டர் அணி தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.